OS No.531/2023

DW-1 –செந்தில்

த/பெ.

நாள். 05.03.2026

<u>பிரதிவாதி தரப்பில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை .</u>

1.எனக்கு படிப்பறிவு கிடையாது, நான் பனியன் கம்பெனியில் அயனிங் மற்றும் பேக்கிங் தொழில் செய்து வருகிறேன். எனக்கும் வாதிக்கும் இடையே கொடுக்கல், வாங்கல் இருப்பதாக என்னுடைய வழக்கில் நான் சொல்லி இருக்கிறேன் என்று சொன்னால் அவரிடம் சீட்டு போட்டு இருந்தேன்.

2.நான் சீட்டு நடத்திக் கொண்டிருந்தேன் என்பதற்கோ அல்லது வாதி என்னிடம் ஒரு லட்சம் ரூபாய் சீட்டு போட்டு இருந்தால் என்பதற்கும் நான் எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. வாதி எனக்கு பணம் கொடுக்க வேண்டும் என்பதை நிரூபிக்க நான் எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

3. நான் கையெழுத்து தமிழில் தான் செய்வேன். காசோலையில் இருக்கும் கையெழுத்து என்னுடையதல்ல வக்காலத்தில் இருக்கும் கையெழுத்து என்னுடையது தான் என்று சாட்சி வக்காலத்து மற்றும் காசோலையை பார்த்துவிட்டு கூறுகிறார். என்னுடைய எதிர்வழக்குரையில் எஸ். செந்தில் என்று தெளிவாகத்தான் எழுதப்பட்டிருக்கிறது என்று சொன்னால் சரிதான். காசோலை என்ன காரணத்திற்காக திருப்பப்பட்டது என்று கேட்டால் என்ன காரணத்திற்காக காசோலை திருப்பப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது.

3. காசோலையில் இருக்கும் கையெழுத்து என்னுடையது அல்ல என்று தான் நான் வழக்காடுகிறேன். வாதி மற்றும் வரதராஜன் மீது எந்த வித புகார் எதும் நான் எந்த கொடுக்கவில்லை. வங்கியில் நான் இந்த காசோலைக்குப் பின்பு

வரவு செலவு வைத்துக் கொள்வது கிடையாது. என்னுடைய கணக்கை மூடிவிட்டேன்.

4.வாதி என்னிடம் எந்த சிறுசேமிப்பு திட்டத்திலும் சேரவில்லை என்று சொன்னால் சரியல்ல. வாதி என்னுடைய வீட்டிலிருந்து காசோலையை எனக்கு தெரியாமல் எடுத்து சென்று விட்டார் என்பதற்கும் நான் எந்த நடவடிக்கையும் எடுக்காத நிலையில் என்னுடைய தரப்பு நிராகரிக்கப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. பாதி இடம் நான் பணம் வாங்கி இருக்கிறேன் என்றும் அதற்குதான் காசோலை கொடுத்து இருக்கேன் என்றும் இந்த வழக்கத்திற்காக நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. வாதி வழக்கு அனுமதிக்கப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

Dr.V.Sree Vidya.

Digitally signed by Dr.V.Sree Vidya.
DN: cn=Dr.V.Sree Vidya., ou=Judicial Department, o=Judicial Officer, l=Tiruppur, st=Tamil Nadu, c=+91
Date: 2026.03.05 19:12:15 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
திருப்பூர்.